**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No. : C. C. No. 157/2023**

**Prosecution Witness : P. W. 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : அனுமன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 09/03/2026

Accused absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது செவ்வாய்ப்பேட்டை காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறேன். கடந்த 17.05.2022ம் தேதி இரவு 19.15 மணியளவில் நான் சோழவரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது, புகார்தாரர் மகேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று குற்ற எண்.388/2022ல் இதச பிரிவுகள் 448, 323, 354 உ/இ 4 of TNPHW Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சி 2 பாதிக்கப்பட்ட கோவிந்தம்மாள் என்பவரை விசாரித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி 3யை விசாரித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இரவு 8.00 மணியளவில் பட்டியல் சாட்சிகள் 4, 5 முன்னிலையில் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் வரைந்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அசா.ஆ.5, 6 ஆக குறியீடு**

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

**செய்யப்படுகிறது.**

எதிரியை தேடி வந்த நிலையில், 10.09.2022 பகல் 12.00 மணியளவில் சிறுணியம் மாதா கோவில் தெருவில் வைத்து எதிரி அஜீத் என்பவரை கைது செய்து, பட்டியல் சாட்சிகள் 6, 7 ஆகியோர் முன்னிலையில் அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். **ஒப்புதல் வாக்குமூலம் அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அவரை காவல் நிலையம் அழைத்துச் சென்று பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்படி இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 448, 323, 354 உ/இ 4 of TNPHW Act ன் கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை 5 மாதங்கள் கழித்து காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். எந்த நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால், இந்த நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டது. சாட்சிகளை நான் எப்போது விசாரித்தேன் என்றால், 17.05.2022 ல் விசாரித்தேன். 18.05.2022 ல் தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால், 17.05.2022 ல் பதிவு செய்துவிட்டேன். மாதிரி வரைபடத்தில் தேதி குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. அனைத்து சாட்சிகளின் வாக்குமூலங்களிலும் நான் கையெழுத்து மட்டும் இட்டு தேதி குறிப்பிடாமல் இருக்கிறேன் என்றால், சரிதான். காலதாமதமாக கொடுக்கப்பட்ட புகாருக்கு என்ன காரணம் என்று சொல்லியிருக்கிறேனா என்றால், வாதியால் தாமதம் மட்டும் என்று தான் சொல்லியுள்ளேன். சாட்சிகளை விசாரித்த பின்பு தான் நான் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றால், சரிதான். புகாரில்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வீணான புகார் எதிரி மீது கொடுக்கப்பட்டு நான் சரிவர விசாரணை செய்யாமலேயே தவறான விவரங்களுடன் இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA